Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 41/2024 PW-1**

Name : மஞ்சுளா
Father / Husband name : மணிமாறன்
Village : சாரம்
Age : 46
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 27.03.2026

A1, A2 present. Counsel for accused present. Witness identified by Olakkur Police HC 248.

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ( நேரம் 11.59 - 12.28 )**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12 ம் வகுப்பு படித்துள்ளேன். புகாரை கைப்பட எழுதியது யார் என்றால் எனது ஊர்க்காரர் பிரபாகரன் எழுதினார். புகார் கொடுக்கும்போது நேரம் என்ன இருக்கும் என்றால் மதியம் நேரத்தில் கொடுத்தேன். சம்பவம் நடந்த அன்று புகார் கொடுத்தேனா என்றால் தகவல் அளித்து விடியோவை அனுப்பினேன். விடியோ ஆதாரம் அனுப்பிய நேரம் என்ன இருக்கும் என்றால் சம்பவம் நடந்த அன்று இரவு சுமார் 12 மணி இருக்கும். எதிரிகளை அன்றையதினமே விசாரித்தார்களா என்றால் தெரியாது. புகார் சம்மந்தமாக விசாரிக்க எனக்கு போலிசார் சம்மன் கொடுத்தார்களா என்றால் தெரியாது, எனது கணவருக்கு தான் தெரியும். நான் செல்போன் மூலம் கொடுத்த தகவலை யாருக்கு கொடுத்தேன் என்றால் காவலர் கோவிந்தராஜ் என்பவருக்கு கொடுத்தேன்.

2. இந்த சம்பவத்திற்கு முன்பே எதிரிகளுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான், 2018 ம் வருடத்திலிருந்து உள்ளது. எனது முதல் விசாரணையில் என்ன முன்விரோதம் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது வீட்டிலிருந்து நாட்டார் கடை எவ்வளவு தூரத்தில்

உள்ளது என்றால் 3 தெரு தள்ளி உள்ளது, நாடார் கடை என்று சொல்வோம், பெயர் இல்லை. எனது மகள் கடைக்கு செல்லும்போது பிரச்சனை நடந்ததா அல்லது சென்றுவிட்டு திரும்பிவரும்போது பிரச்சனை நடந்ததா என்றால் செல்லும்போது நடந்தது. எனது வீடு எத்தனை அறைகள் கொண்டது என்றால் வீட்டிற்கு முன்புறம் கடையும், உள்ளே மூன்று அறைகளும் உள்ளது. எனது மகளின் சத்தம்கேட்கும்போது நான் வீட்டின் உள்ளே இருந்தேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் கீழே விழுந்ததாக சொல்லியுள்ளேன், அதில் காயம் ஏற்பட்டு சிகிச்சை எடுத்துக்கொண்டேனா என்றால் எடுத்துக்கொண்டேன்.

3. முதல் விசாரணையில் எதிரி என்னை கையாலும், காலாலும் தாக்கியதாக சொல்லியுள்ளேன், அதற்கு சிகிச்சை எடுத்துக்கொண்டேனா என்றால் எடுத்துக்கொண்டேன். முதல் விசாரணையில் என்னை கட்டையால் அடித்ததாக சொல்லியுள்ளேன், எங்கு அடித்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான், புகாரில் சொல்லியுள்ளேன். பொதுவாக கட்டையால் தாக்கினால் வெளிப்புறக்காயம், வீக்கம் மற்றும் கன்றியக்காயம் ஏற்படும் என்றால் சரிதான். முதல் விசாரணையில் மண்ணெண்னெய் ஊற்றி கொளுத்திவிடுவதாக சொல்லியுள்ளேன், அதனை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. சம்பவத்தன்று எனது கணவர் வந்த பிறகு என்னை மருத்துவமனக்கு அழைத்துச்சென்றார் என்றால் சரிதான். இந்த சம்பவத்திற்கு முன்னர் 26.06.2023 அன்று எதிரிகள் புகார் கொடுத்து சிசி 15/2024 வழக்கில் நான் இந்நீதிமன்றத்தில் ஆஜர் ஆனேன் என்றால் சரிதான்.

4. எதிரிகள் கொடுத்த வழக்கில் 18.07.2025 அன்று இருதப்பிரனும் சமரசமாகி முடிந்துவிட்டது என்றால் சரிதான், அது பொய் வழக்கு. 19.07.2025 அன்று அந்த வழக்கில் என்னை விடுதலை செய்து தீர்ப்பானது என்றால் சரிதான். சந்தோஷ் என்பவர் எனக்கு என்ன உறவு என்றால் எனது ஊர்க்காரர். நான் மருத்துமவனைக்கு செல்லும்போது என்னை தடி மற்றும் கையால் அடித்து காயம்

ஏற்பட்டதாக சொல்லி சிகிச்சை எடுத்துக்கொண்டேனா என்றால் சொல்லி எடுத்துக்கொண்டேன். சம்பவத்தில் எனக்கு வலி இருந்ததாக சொல்லி சிகிச்சை எடுத்துக்கொண்டேனா என்றால் ஆமாம், சொல்லி எடுத்துக்கொண்டேன். சம்பவத்தில் சத்தியாவிற்கு எந்தக்காயமும் ஏற்பட்டு சிகிச்சை எடுக்கவில்லை என்றால் சரிதான். நானும் எதிரிகளும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எனது மகளின் கையை பிடித்து எதிரிகள் இழுத்ததாக சொல்வதும், என்னை அடித்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

5. எனது வீட்டிற்கு அருகில் குடிநீர் குழாய் உள்ளது என்றால் சரிதான். என்மீது இருந்த வழக்கு 2023 ல் பதிவு செய்யப்பட்டது, எதிரிகள் மீது 2024 ல் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். என்மீது இருந்த வழக்கு சமரசம் செய்தபோதும், இந்த வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். எனது மகளின் கையை 1வது எதிரி பிடித்து இழுத்ததாக சொல்லியுள்ளேன், யார் வீட்டின் முன்பு நடந்தது என்று புகார் மற்றும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, எனது வீட்டின் முன்பு நடந்தது. மாரியம்மன் கோவில் எனது வீட்டிலிருந்து எத்தனை தெரு தள்ளி உள்ளது என்றால் 2, 3 தெருக்கள் தள்ளி உள்ளது. எனது வீடு உள்ள பகுதி நிரைய வீடுகள் உள்ள பகுதி என்றால் சரியல்ல, சாட்சி பின்னிட்டு சரிதான், 2, 3 வீடுகள் காலியாக உள்ளதாக சொல்லியுள்ளார்.

6. சம்பவத்தை எத்தனை நபர்கள் பார்த்திருப்பார்கள் என்றால் சுமார் 10, 20 பேர் இருக்கலாம். பொன்னுசாமியும், பார்த்திபனும் எங்கள் தெருவை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எனது தெருவின் பெயர் என்ன என்றால் இந்திராகாந்தி தெரு. பொன்னுசாமியும், பார்த்திபனும் எந்த தெருவை சேர்ந்தவர் என்றால் தெரியாது, எங்கள் தெருவிற்கு பக்கத்தில் வசிக்கிறார்கள். பொன்னுசாமியும், பார்த்திபனும் ஆகியோர்கள் சம்பவத்தை பார்த்தார்கள் என்று புகார் மற்றும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல,

விசாரணையில் சொல்லியுள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் மேற்படி விவரம் உள்ளதா என்றால் இல்லை.

சாட்சி தொடர்ந்து அவரிடம் வீடியோ ஆதாரம் உள்ளாதாகவும், ஒவ்வொரு கேள்விகளுக்கும் உணர்ச்சிவசமாக பதில் சொல்வதாலும், அரசு வழக்கறிஞர் ஆஜராகும் தினத்தன்று குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.